**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 409/2007**

Deposition of **<u>PW.3</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 31.10.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : முருகேசன் Father's Name : நல்லமுத்து

துவக்க நேரம்: 03.34 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. வாதி, 1-ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் தற்போதுவரை ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். மே ற்படி பத்திரம் எழுதப்பட்ட தினத்தில் நானும், பத்திர பதிவு அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் ஆமாம். மேற்படி பத்திரத்தில் உள்ள விவரங்களை என்னிடம் படித்துக் காட்டினார்களா என்றால் ஆமாம். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்டுள்ள சொத்தின் சுவாதீனத்தை பத்திரம் பதிவு செய்யப்பட்ட அன்றே ஒப்படைப்பததாக குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள சொத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பாதைகள் அமைத்துக்கொள்ளவும், பாதைகளை பாராமரிப்பு கொள்ளவும் வேண்டி வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பாதைகளை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனவே, மேற்படி இடத்தில் தேவைப்படும்போது பாதை அமைத்துக்கொள்ள 1-ம் பிரதிவாதிக்கு உரிமை

உள்ளது என்றால் சரிதான். தற்பொழுதுவரை மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்படவில்லை என்பதால் அந்த சொத்தின் உரிமையாளர் வாதி இல்லை என்றால் சரிதான். உரிமை இல்லாத சொத்தில் ஒருவர் அனுபவம் செய்வது சட்ட விரோதமான அனுபவம் என்றால் சரிதான். எனவே, வாதி தாவா சொத்தில் சட்டவிரோதமான அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான், ஆனால் பக்கத்து நிலத்துக்காரரும் பாதைக்கு எழுதிக்கொடுப்பதாக கூறிவிட்டு அவர்கள் அவ்வாறு எழுதிக்கொடுக்காததால் இதுவரை பாதை அமைக்கப்படவில்லை. அதனால் வாதி அவரது சொத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறார்.

3. எனது முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் வாதியின் நிலத்துக்கு பக்கத்து நிலத்துக்காரர்கள் பாதைக்கு நிலம் வழங்குவதாக கூறினார்கள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் யார் யார் எவ்வளவு நிலம் வழங்கப்போவதாக கூறினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுடன் பைசல் பேசியதாக குறிப்பிட்டுள்ள தினத்தில் மேற்படி பக்கத்து நிலத்துக்காரர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல, அவரும் கலந்துகொண்டனர். அவ்வாறு யார் யார் கலந்துகொண்டார்கள் என்றால் தங்கவேல், தங்கராசு, வேலு, மணி மற்றும் சிலரும் கலந்துகொண்டார்கள். அவ்வாறு சமரசம் பேசிய தினத்தில் அதற்கான முச்சிலிக்கா எழுதப்பட்டதா என்றால் இல்லை.

4. கடந்த 25.02.2008 அன்று நான் கூறுவதுபோல் எந்த சமரசமும் பேசப்படவில்லை என்றாலும் நான் வாதிக்கு ஆதரவாக தற்பொழுது அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி, 2, 3 பிரதிவாதிகள் மூலம் வாதியிடம் கேட்டுக்கொண்டதன்பேரில் சமரசம் பேசப்பட்டது என்று கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வாதி எனக்கு கடந்த பாதை அமைத்தால் தனது நிலத்தின் மதிப்பு கூடும்

என்பதால் பாதைக்காக தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துவிட்டு தற்பொழுது வாதிக்கு வேண்டாதவர்களும் அந்த பாதையை பயன்படுத்துவார்கள் என்பதால்பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்ளவதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறுவிசாரணை இல்லை.

முடிவு நேரம்: 03.55 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.409/2007, Dt.31.10.2025.